*கவனிக்க.- 2018.04.12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2068 - 2018 අප්‍රේල් මස 20 වැනි සිකුරාදා - 2018.04.20

*2068 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 800 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 807 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 796 | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2018, மே மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

795- B 81273- 5403 (2018/04)

# ஆய விற்பனையும் குத்தகையும்

## கள்ளுத்தவறணை விற்பனையும் குத்தகை விற்பனையும் வென்னப்புவ பிரதேச செயலாளர் பிரிவு

## 2018/2019

2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதிக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான விண்ணப்பப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன. தற்போது அமுலில் இருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்களும் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதி 207ஆம் இலக்க கள்ளுத்தவறணை குத்தகைக்கு கொடுக்கப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக தயார் செய்யப்படல் வேண்டும்.

2. விண்ணப்பப்பத்திரங்கள் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய விண்ணப்பப்படிவங்களில் தயார் செய்யப்படல் வேண்டியதோடு, அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய வைப்புப் பணத்தை பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச் சீட்டையும், விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியான அத்தாட்சிப்பத்திரமும் இணைக்கப்படல் வேண்டும்.

3. விண்ணப்பப்பத்திரங்கள் இணைக்கப்படும் உறையின் இடது பக்கத்தில் இல. .............. பெயர் ......................... கள்ளுத்தவறணைக்கான விண்ணப்பப் பத்திரம் என கீழ்க் குறிப்பிட்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள படி தவறணைக்கான இலக்கத்தையும் பெயரையும் குறிப்பிட்டு 2018 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆந் திகதி தொடக்கம் மே மாதம் 22 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு முன் வென்னப்புவை பிரதேச செயலாளருக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைவாக இருத்தல் வேண்டும்.

5. 2018.05.22 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைவதுடன் விண்ணப்பப்பத்திரங்கள் திறக்கப்படும். அச்சமயத்தில் விண்ணப்பக்காரர்கள் அனைவரும் வென்னப்புவை பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. குறிப்பிட்ட திகதியில் விற்பனை செய்ய இயலாத கள்ளுத்தவறணைகள் மீள விற்பனை 2018. 06.11 ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு நடைபெறும். அன்றைய நாளும் விண்ணப்பங்கள் வர்த்தமானப்பத்திரத்தின் படி அமைதல் வேண்டும்.

7. இது பற்றிய மேலதிக விபரங்கள் வென்னப்புவ பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

யூ.எஸ். என். பிரனாந்து,
பிரதேச செயலாளர்,
வென்னப்புவை.

பிரதேச செயலகம்,
வென்னப்புவை.

### அட்டவணை

| தொடர் இல. | பிரதேசம் | கிராமம் | கேள்விப்பத்திரம் ஏற்கும் நேரமும் இறுதித் திகதியும் | கேள்விப் பத்திர வைப்பத் தொகை ரூபா |
|---|---|---|---|---|
| 1. | வென்னப்புவ பி.செ. பிரிவு | தம்பராவில் | 2018.05.22 காலை10.30 மணிக்கு | 500.00 |
| 2. | வென்னப்புவ பி.செ. பிரிவு | நஞ்சுண்டான்கரை | 2018.05.22 காலை10.30 மணிக்கு | 250.00 |
| 3. | வென்னப்புவ பி.செ. பிரிவு | வைக்கால் | 2018.05.22 காலை10.30 மணிக்கு | 1,000.00 |
| 4. | வென்னப்புவ பி.செ. பிரிவு | பொறலெஸ்ஸ | 2018.05.22 காலை10.30 மணிக்கு | 500.00 |
| 5. | வென்னப்புவ பி.செ. பிரிவு | தும்மலதெனிய | 2018.05.22 காலை10.30 மணிக்கு | 1,000.00 |
| 6. | வென்னப்புவ பி.செ.பிரிவு | உள்ஹிட்டியாவ | 2018.05.22 காலை10.30 மணிக்கு | 500.00 |
| 7. | வென்னப்புவ பி.செ. பிரிவு | லுணுவில | 2018.05.22 காலை10.30 மணிக்கு | 500.00 |
| 8. | வென்னப்புவ பி.செ. பிரிவு | வென்னப்புவ | 2018.05.22 காலை10.30 மணிக்கு | 2,000.00 |
| 9. | வென்னப்புவ பி.செ. பிரிவு | நயினமடம் | 2018.05.22 காலை10.30 மணிக்கு | 1,000.00 |

| தவறணை திறக்கப்படும் நேரம் | மூடப்படும் நேரம் |
|---|---|
| மு.ப.11.00 | பி.ப. 2.00 |
| பி.ப. 5.00 | இரவு 8.00 |

4-915

## மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச செயலகப் பிரிவு ஆறுமுகத்தான் குடியிருப்பு

*கள்ளுத் தவறணைக்கான குத்தகை விற்பனை - 2018 யூலை- 2019 யூன்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1982, ஓகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள 1982ஆம் ஆண்டின் கள்ளுத்தவறணை குத்தகைக்கு விற்பனை நிபந்தனைகளுக்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேசத்திற்குட்பட்ட ஆறுமுகத்தான் குடியிருப்பு கள்ளுத்தவறணைக்கான 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2019, யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள கள்ளு விற்கும் பிரத்தியேக உரிமைக்கு கேள்வி விண்ணப்பங்கள் கீழ் குறிப்பிட்ட திகதி, நேரம் வரை ஏறாவூர்பற்று பிரதேச செயலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்வி திறக்கப்படும்போது கேள்விதாரர்கள் ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேச செயலகத்தில் நடாத்தப்படும் கேள்விச் சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.*

*1. கேள்வி விண்ணப்பங்களின் பேரில் ஆயிரத்து ஐநூறு ரூபா ( ரூபா 1,500) பணத்தை ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேச செயலாளரின் பெயரில் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டினையும், சமர்ப்பிக்கும் பட்சத்தில் விண்ணப்பப்படிவத்தை பெறமுடியும். இக்கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்படும்போது இப்பற்றுச்சீட்டும் இணைக்கப்படுதல் அவசியமாகும். கேள்விப்பத்திர விநியோகம் 2018.05.02 ஆந் திகதி முதல் 2018.05.18 ஆந் திகதி பிற்பகல் 3.00 மணியுடன் முடிவடையும்.*

*2. அந்தந்த பிரதேச செயலாளரினால் வழங்கப்படும் பெறுமதி சான்றிதழானது கேள்விதாரர் விண்ணப்பிக்கும் தொகையில் 15% வீதத்திற்கு குறைவாக இருத்தலாகாது. இப்பெறுமதி சான்றிதழ் கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.*

*3. பிழையாக பூரணப்படுத்தப்படும் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.*

*4. கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்காது கேள்விப்பத்திரங்களுக்கு செலுத்திய பணத்தை மீளப் பெற விரும்பினால் தங்களின் கோரிக்கையை கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் தினத்திலிருந்து இரண்டு வாரங்களுக்குள் தாங்கள் பெற்றுக்கொண்ட கேள்விப்பத்திரங்களை பூரணப்படுத்தாது பணம் செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டுடன் மீளச் சமர்ப்பித்தால் அக்கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படும்.*

*5. தவறணை தற்போது இருக்கும் இடத்தில் தொடர்ந்தும் இருக்கும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.*

*6. பதிவு செய்யப்பட்ட தெங்கு, பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த குத்தகை விற்பனையில் கலந்து கொள்வதாயின் சங்கம் அமைந்திருக்கும் பிரதேசத்திற்குரிய கள்ளுத் தவறணைக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். அத்துடன் சங்கம் தற்போது இயங்குகின்றமை பற்றியும் சங்கத்தால் கள்ளுத்தவறணையை குத்தகைக்கு எடுத்து நடாத்தக்கூடிய ஆற்றல் உள்ளமை பற்றியும் மட்டக்களப்பு மாவட்ட உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே குத்தகை விற்பனைக்கான விண்ணப்பப்படிவம் வழங்கப்படும். ( நிதி அமைச்சின் 01/2012 ஆம் இலக்கம் கொண்ட 2012.01.05ஆந் திகதிய சுற்றுநிருபத்திற்கமைவாக காணப்படுதல் வேண்டும்.)*

*7. ஏனைய விபரங்கள் ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

என். வில்வரத்னம்,
பிரதேச செயலாளர்,
ஏறாவூர்பற்று,
செங்கலடி.

*பிரதேச செயலகம்,
ஏறாவூர்பற்று,
செங்கலடி,
2018, மாச்சு 14.*

**கள்ளுத் தவறணை அமைய வேண்டிய இடம்**

| தவறணை அமைய வேண்டிய இடம் | தவறணை இலக்கம் | கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியும் நேரமும் | |
|---|---|---|---|
| | | திகதி | நேரம் |
| ஆறுமுகத்தான் குடியிருப்பு | TT No. 1 | 2018.05.30 | மு.ப. 10.00 மணி |

**குறிப்பு.-** 1. கேள்விச் சபை 2018.05.30 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்குக் கூடும்.
2. விற்பனை தினத்தில் தகுதியான குத்தகைக்காரர் தேர்ந்தெடுக்கப்படாது விட்டால் மறு கேள்விச் சபை 2018.06.08 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு நடைபெறும்.

4- 565

---

## மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவு
## கோட்டைமுனை TT-2 ஆம் இலக்க

கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை

2018, யூலை - 2019 யூன்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1982, ஒகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விற்பனை செய்யவும் 1982 ஆம் ஆண்டின் நிபந்தனைகளுக்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை வடக்கு பிரதேசத்திற்குட்பட்ட கோட்டைமுனை கள்ளுத்தவறணைக்கான 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2019, யூன் மாதம் 30ஆந் திகதி வரையுள்ள கள்ளு விற்கும் பிரத்தியேக உரிமைக்கு கேள்வி விண்ணப்பங்கள் கீழ்க் குறிப்பிட்ட திகதி, நேரம் வரை மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்வி திறக்கப்படும் போது கேள்விதாரர்கள் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நடாத்தப்படும் கேள்விச் சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

1. கேள்வி விண்ணப்பங்களின் பேரில் ஆயிரத்து ஐநூறு ரூபா (ரூபா 1,500) பணத்தை மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் என்ற பெயரில் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டினையும், பெறுமதிச்சான்றிதழின் பிரதியையும் சமர்ப்பிக்கும் பட்சத்தில் விண்ணப்பப்படிவத்தை பெறமுடியும். இக்கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்படும்போது இப்பற்றுச்சீட்டும் இணைக்கப்பட்டிருத்தல் அவசியமாகும். கேள்விப்பத்திர விநியோகம் 2018.05.10 ஆந் திகதி முதல் 2018.05.24 ஆந் திகதி பிற்பகல் 3.00 மணியுடன் முடிவடையும்.

2. அந்தந்த பிரதேச செயலாளரினால் வழங்கப்படும் பெறுமதிச் சான்றிதழானது கேள்விதாரர் விண்ணப்பிக்கும் தொகையில் 15 % வீதத்திற்கு குறைவாக இருத்தலாகாது. இப்பெறுமதிச் சான்றிதழின் மூலப் பிரதி கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் இப்பெறுமதிச் சான்றிதழுடன் காணிப்பதிவாளரினால் வழங்கப்படும் காணி வரலாற்றுச் சுருக்கப் பிரதியும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். (இது கேள்விப்பத்திரம் விநியோகிக்க ஆரம்பிக்கப்பட்ட தினத்திற்கு பிந்திய தினத்தில் பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும்.)

3. கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் கடித உறையினுள் தங்களால் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களின் பிரதிகளை இன்னுமொரு கடித உறையினுள் இட்டு அதனை மூடி விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

4. கேள்விப் பத்திரங்கள் பிழையாக நிரப்பப்பட்டிருந்தாலும், மேற்படி 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் இணைக்கப்படாமலிருந்தாலும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

5. கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்காது கேள்விப்பத்திரங்களுக்கு செலுத்திய பணத்தை திருப்பி எடுக்க விரும்பினால் தங்களின் கோரிக்கையை கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் இறுதி நாளில் இருந்து இரண்டு வாரங்களுக்குள் தாங்கள் பெற்றுக்கொண்ட கேள்விப்பத்திரங்களை பூரணப்படுத்தாது பணம் செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டுடன் திருப்பிச் சமர்ப்பித்தால் அக்கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

6. தவறணை தற்போது இருக்கும் இடத்தில் தொடர்ந்தும் இருக்கும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

7. பதிவு செய்யப்பட்ட தெங்கு, பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் இந்தக் குத்தகை விற்பனையில் கலந்து கொள்வதாயின் சங்கம் அமைந்திருக்கும் பிரதேசத்திற்குரிய கள்ளுத் தவறணைக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். அத்துடன் சங்கம் தற்போது இயங்குகின்றமை பற்றியும் சங்கத்தால் கள்ளுத்தவறணையை குத்தகைக்கு எடுத்து நடாத்தக்கூடிய ஆற்றல் உள்ளமை பற்றியும் மட்டக்களப்பு மாவட்ட உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே குத்தகை விற்பனைக்கான விண்ணப்பப்படிவம் வழங்கப்படும். ( நிதி அமைச்சின் 01/2012 ஆம் இலக்கம் கொண்ட 2012/01/05 ஆம் திகதிய சுற்றுநிருபத்திற்கமைவாக காணப்படுதல் வேண்டும்.)

8. ஏனைய விபரங்கள் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கு. குணநாதன்,
பிரதேச செயலாளர்,
மண்முனை வடக்கு,
மட்டக்களப்பு.

பிரதேச செயலகம்,
மண்முனை வடக்கு,
மட்டக்களப்பு.

கள்ளுத் தவறணை அமைய வேண்டிய இடம்

| தவறணை அமைய வேண்டிய இடம் | தவறணை இலக்கம் | கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியும் நேரமும் | |
|---|---|---|---|
| | | திகதி | நேரம் |
| மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குள் | TT No. 2 | 2018.05.24 | பி.ப. 3.00 மணி |

**குறிப்பு.**- 1. கேள்விச் சபை 2018.05.24 ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்குக் கூடும்.
2. விற்பனை தினத்தில் தகுதியான குத்தகைக்காரர் தேர்ந்தெடுக்கப்படாது விட்டால் மறு விற்பனை 2018.06.06 ஆந் திகதி பி.ப. 3.00 மணிக்கு நடைபெறும்.

4- 730

---

## நாத்தாண்டிய பிரதேச செயலகப் பிரிவு

கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை 2018 யூலை மாதம் முதல் 2019 யூன் மாதம் வரை

2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதிக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் உள்ள கள்ளுத்தவறணைகள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய சில்லறையாகக் கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. தற்போது அமுலில் இருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்களும் பொது நிபந்தனைகளும் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் கள்ளுத்தவறணைகள் குத்தகை இடும் நிபந்தனைகளுக்குமமைவானதாகும்.

3. எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவத்தில் கேள்வியைச் சமர்ப்பிக்கப்படுவதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப்பணமாக நாத்தாண்டிய பிரதேச செயலகத்தில் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% அத்தாட்சி சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

4. கேள்விப் பத்திரங்கள் முறையாக பொறியிடப்பட்டு கடித உறையிலிட்டு இடது பக்கத்தில் தவறணையின் பெயரும் இலக்கமும் பின்வருமாறு " 01. மூதுகடுவ கள்ளுத்தவறணை " அல்லது " 02. கடுநேரிய கள்ளுத்தவறணை" எனக் குறிப்பிடப்பட்டு 2018.05.21 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு முன்பு நாத்தாண்டிய பிரதேச செயலகத்தில் உள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இடுதல் வேண்டும் அல்லது

பதிவுத் தபாலில் மேற்குறிப்பிடப்பட்ட நேரம், திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாய் "பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், நாத்தாண்டிய" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

5. கேள்விப் பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய இருத்தல் வேண்டும்.

6. 2018, மே 21 ஆந் திகதி காலை 10.30. மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அந்த நேரம் மனுதாரர் அனைவரும் இச் செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

7. மேற்குறிப்பிடப்பட்ட தினத்தில் விற்பனையாகாமல் தவறணைகள் ஏதும் இருப்பின் அவற்றுக்கான மீள் விற்பனை 2018.06.07ஆந் திகதி காலை 10.30 மணிக்கு இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைய நடைபெறும்.

இது தொடர்பாக மேலதிக விபரங்கள் நாத்தண்டிய பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

விஜானி வசந்திகா,
உதவிப் பிரதேச செயலாளர்,
நாத்தாண்டிய.

பிரதேச செயலகம்,
நாத்தாண்டிய,
2018, ஏப்பிறல் 05.

**அட்டவணை**

| தவறணை இல. | வலயம் | கிராமம் | வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 1. | நாத்தாண்டிய | மூதுகடுவ | ரூ.1,000.0 |
| 2. | நாத்தாண்டிய | கட்டுனேரிய | ரூ.1,000.0 |

4-737

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றின் கூட்டிணைப்பு பற்றிய பகிரங்க அறிவித்தல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனி 2018, மாச்சு 15 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டது என்ற விபரம் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவிற்கு அமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : த்ரீஃபிப்ட்டி எட் யூனியன் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 130733
பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: இல. 25, றைஹன்லான்ட் பிளேஸ், கொழும்பு 3

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

த்ரீஃபிப்ட்டி எட் யூனியன் (பிறைவேட்) லிமிட்டட்
பிரண்டிக்ஸ் மனேஜ்மன்ட் சேர்விஸ்
(பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

4-579

## பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்குஅமைய, பீனிக்ஸ் கொன்ஸ்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டட் தனது பெயரை மூஸ் குளோத்திங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் என்று மாற்றிக் கொண்டுள்ளது என்பது 2007ஆம்ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவிற்கு அமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

முன்னைய கம்பனியின் பெயர் : பீனிக்ஸ் கொன்ஸ்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 17983
பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: இல. 36, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு 11
புதிய கம்பனியின் பெயர் : மூஸ் குளோத்திங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

மூஸ் குளோத்திங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்
பிரண்டிக்ஸ் மனேஜ்மன்ட் சேர்விஸஸ்
(பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

4-580

**வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றின் கூட்டிணைப்பு பற்றிய பகிரங்க அறிவித்தல்**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனி 2018, சனவரி 28 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டது என்ற விபரம் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவிற்கு அமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : கிரபியோ ஃபைப் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 130315
பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: இல. 25, றைஹன்லான்ட் பிளேஸ், கொழும்பு 3

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கிரபியோ ஃபைப் (பிறைவேட்) லிமிட்டட்
பிரண்டிக்ஸ் மனேஜ்மன்ட் சேர்விஸ் (பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

4-581

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ், பின்வரும் கம்பனி 2018, மாச்சு மாதம் 26 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது.-

கம்பனியின் பெயர் : ஒடோ ஆர்காடீ கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 131137
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 457, கொழும்பு வீதி, பெபிலியான, பொரலஸ்கமுவ

ஜேசி அன்ட் கம்பனி,
கம்பனிச் செயலாளர்.

இல. 9/5,
தம்பையா எவன்யு,
கொழும்பு 7.

4- 585

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர்: ஜியோஹாார்பர் என்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 129755
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.02.12
பதிவு முகவரி : பிளெட்டினம், அபார்ட்மன்ட் , இல. 13 சீ, பக்கத்தலே வீதி, கொழும்பு 4

டீ சீ. ரவீன் விக்கிரமசிங்க,
கம்பனிச் செயலாளர்.

4-594

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(5)ஆம் பிரிவின் பிரகாரம்.-

கொழும்பு 03, பாம் கரூவ், இல. 27 இல் தமது பதிவு அலுவலகம் அமைந்துள்ள பீபீ 242 பதிவிலக்கத்தைக் கொண்டுள்ள மர்கன்டையில் ஷிப்பிங் ஏஜன்சீஸ் லிமிட்டட்டின் அங்கத்தவர்கள் இத்தால் பொது அறிவித்தல் விடுத்துக்கொள்வதாவது, மேலே குறிப்பிட்டுள்ள சட்டத்தின் 11 ஆம் பிரிவின் துணை வாசகங்களுக்கமைவாக அதன் பெயர் மாற்றம் செய்யப்படுவதாக கருதப்பட்டு மற்றும் மேலே குறிப்பிட்டுள்ள சட்டத்தின் 29 ஆம் பிரிவின் துணை வாசகங்கள் பிரகாரம், அது ஒரு தனியார் கம்பனியாக மாற்றம் செய்யப்பட்டு, 2018.03.27 ஆந் திகதியன்று ஒரு கூட்டமொன்றில் உறுப்பினர்களால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இதன் பிறகு அது மர்க்கன்டையில் ஷிப்பிங் ஏஜன்சீஸ் (பிறைவேட்) லிமிட்டட் என அறியப்படும் என்பதாகும்.

பணிப்பாளர்.

2018.03.28.

4- 615

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர்: றோயல் குரோவ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 129427
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.02.01
பதிவு முகவரி : அஹஸ்பொக்குணவத்த, இல. 220, பிரண்தன, ஹிந்தகொல்ல

கம்பனிச் செயலாளர்.

4-621

## அறிவித்தல்

டென்சிங்க் (பிறைவேட்) லிமிட்டட் (பீவீ 20346) மற்றும் லெமுரெப் இன்வெஸ்ட்மண்ட்ஸ் லிமிட்டட் (பீபி 1817) என்பவற்றை ஒன்றிணைத்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244 (3) ஆம் பிரிவின் நியதிகளின்படி டென்சிங்க் (பிறைவேட்) லிமிட்டட் மற்றும் லெமுரெப் இன்வெஸ்ட்மண்ட்ஸ் லிமிட்டட் என்பவற்றை ஒன்றிணைத்தல் பற்றிய அறிவித்தலை இத்தால் கொடுக்கின்றோம். இதன் விளைவாக லெமுரெப் இன்வெஸ்ட்மண்ட்ஸ் லிமிட்டட் ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியாகவிருக்கும். ஒன்றிணைத்தலானது 2018, சனவரி மாதம் 09 ஆந் திகதியன்று பயனுக்கு வந்தது. ஒன்றிணைனக்கப்பட்ட கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் கொழும்பு 4, லோரீஸ் வீதி, 94/5 ஆம் இலக்கத்தில் இருத்தல் வேண்டும்.

சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

4-633

---

## பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.-

1. கம்பனியின் பெயர் : சிம்பிலி அமசிங் டுவர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 130502
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.03.19
பதிவு செய்யப்பட்ட முகவரி : 13B, கிளியர்பெயின்ட் ரெசிடன்ஸ், 1, பெரேரா மாவத்தை, கொடுவேகொட, இராஜகிரிய

1. கம்பனியின் பெயர் : த ஸ்பல்ஸ் குரூப் எஸ் எல் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 130782
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018. 03. 19
பதிவு செய்யப்பட்ட முகவரி : 13B, கிளியர்பெயின்ட் ரெசிடன்ஸ், 2, பெரேரா மாவத்தை, கொடுவேகொட, இராஜகிரிய

என் கோப்பரேட் சேர்விஸ்
(பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்.

4-634

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பின்வரும் கம்பனி 2018, மாச்சு மாதம் 26 ஆம் திகதி பதிவுசெய்யப்பட்டது.-

கம்பனியின் பெயர் : எஸ்.எம்.வீ. ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 131107
பதிவுத் திகதி : 2018.03.26
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல.90, கொங்கிதொட்ட, வத்தளை

யூ.வீ.டீ.என். கருணாரத்ன,
கம்பனிச் செயலாளர்.

இல. 282/3,
டாம் வீதி,
கொழும்பு 12.

4-645

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக அறிவிக்கபபடுகின்றது.-

கம்பனியின் பெயர் : ஹுஹயூ இன்ஜினியரிங் கன்ஸ்ட்ரக்‌ஷன் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 130893
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 37, ஸ்ரீ தர்மகீர்த்தியாராம ரோட், கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018. 03. 19

கோர்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

4- 646

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக அறிவிக்கபபடுகின்றது.-

கம்பனியின் பெயர் : குட் வூட் லும்பர் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இல.: பீவீ 114548
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 47, அலக்ஸான்ட்ரா பிளேஸ், கொழும்பு 7

*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018. 02. 19*

கோர்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

4- 647

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், கூட்டிணைக்கப்படல் தொடர்பான பகிரங்க அறிவித்தல்.-

*கம்பனியின் பெயர் :* வின்ஸ்டார் கன்சல்டன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018. 03.27*
*பதிவிலக்கம் : பீவீ 131188*
*பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி :* இல. 45, வேம்படி வீதி, யாழ்ப்பாணம், இலங்கை

கம்பனிச் செயலாளர்கள்.

4- 649

---

## பகிரங்க அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 8 ஆம் பிரிவு* ஏற்பாடுகளுக்கு அமைய, ஹேலீஸ் லெஷர் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் தனது பெயரை ஹேலீஸ் ஏவியேஷன் எண்ட் புரொஜெக்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் என்று மாற்றிக்கொண்டுள்ளது என்பது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவிற்கு அமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

*முன்னைய கம்பனியின் பெயர் :* ஹேலீஸ் லெஷர் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் : பீவீ 70644*
*பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:* இல. 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10
*புதிய கம்பனியின் பெயர் :* ஹேலீஸ் ஏவியேஷன் எண்ட் புரொஜெக்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஹேலீஸ் குரூப் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 400,
கொழும்பு 10,
2018, ஏப்பிறல் 2.

4-650

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் பிரகாரம், கீழே குறிப்பிட்டுள்ள கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பான அறிவித்தலை நாம் இத்தால் வழங்குகின்றோம்.-

*கம்பனியின் பெயர் :* டி பீ எல் டிரேடிங் (பிறைவேட்) லிமிட்டட்
*கம்பனி இலக்கம் : பீவீ 131136*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018. 03. 26*
*கம்பனியின் பதிவு முகவரி :* இல.10, 5 ஆம் மாடி, கோதமி வீதி, கொழும்பு 8

டி பீ எல் டிரேடிங் (பிறைவேட்) லிமிட்டட் என்ற கம்பனிக்காகவும் அதன் சார்பிலும்,

பி டபிள்யு கோப்பரேட் செக்கரட்டேரியல்
(பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

2018, மார்ச் 29.

4-652

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர் :* வெல் அன்ட் எபல் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் : பீவீ 128148*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017. 12. 18*
*பதிவு முகவரி :* முதலாம் மாடி, செலஸி கட்டிடம், இல. 44, பன்சல வீதி, கொழும்பு 10

கம்பனிச் செயலாளர்.

4-656

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், குறிப்பிடப்பட்ட பிறைவேட் லிமிட்டட் பொறுப்பு கம்பனி 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதி இணைக்கப்பட்டுள்ளது.-

*கம்பனியின் பெயர் :* ஸ்கைபோர்ட்ஸ் இன்டர்நெஷனல் (பிறைவேட்) லிமிட்டட்
*கம்பனி பதிவிலக்கம் : பீவீ 130102*
*பதிவு செய்யப்பட்ட அலுவலகம் :* இல. 144ஏ/சி, ஹில் வீதி, கம்பொல

கம்பனிச் செயலாளர்.

4-659

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) இன் விதிமுறைகளின் கீழ் பின்வரும் கம்பனி முறையாக கூட்டிணைக்கப்பட்டமைக்கான அறிவித்தல்.-

*கம்பனியின் பெயர் :* மஹகுரு ரோட்ரிகுவஸ் (பிறைவேட்) லிமிட்டட்
*கம்பனி பதிவு எண். :* பீவீ 130613
*பதிவு முகவரி :* 'ஓரேக்ஸ் சிட்டி', இல. 555, 4 ஆவது மாடி, ஏக்கல, ஜா-எல
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2018. 03. 12

கம்பனிச் செயலாளர்.

4-676

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப் பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர் :* சேம் ஹிகே (பிறைவேட்) லிமிட்டட்
*பதிவு இலக்கம் :* பீவீ 130563
*பதிவு முகவரி :* க்ரெஸ்கேட் ரெசிடன்ஸீஸ் அப்பார்ட்மன்ட் 22, ஸ்டுவட் பிளேஸ், கொழும்பு 3
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2018. 03. 09

சபையின் கட்டளைப் பிரகாரம்,

கம்பனிச் செயலாளர்.

4-720

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர் :* ஜே 7 விலாஜ் ரிசோட் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்
*கம்பனி பதிவு எண். :* பீவீ 131418
*பதிவு முகவரி :* இல. 81/9, அலஸ் தோட்டம், திருகோணமலை
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2018. 04. 04

மா.கிருஸ்ணகுமாார்
கம்பனிப் பணிப்பாளர்.

4-727

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர் :* சோல்ட் லேக் இன்டஸ்ட்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் :* பீவீ 125449
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2017. 09. 12
*பதிவு முகவரி :* இல.180, ஆர்.ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 3

எம்.எச். எம்.பஸ்லுர் ரஹ்மான்,
கம்பனிச் செயலாளர்.

4-733

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2)ஆம் பிரிவின் கீழ் மாஸ் கெப்பிட்டல் ( பிறைவேட்) லிமிட்டட் ( கம்பனி பதிவிலக்கம் பீவீ 12995) இன் அறிமுகப்படுத்தப்பட்ட மூலதனம் முன்மொழியப்பட்ட மூலதனக் குறைப்பு இலங்கை ரூபா நான்கு பில்லியன் முந்நூற்று ஒரு மில்லியன் முந்நூற்று நாற்பத்தி நான்காயிரத்து முந்நூற்று பத்து (இலங்கை ரூபா 4, 301, 344,310) இருந்து இலங்கை ரூபா தொள்ளாயிரம் மில்லியன் தொள்ளாயிரத்து நாற்பத்தி நான்காயிரத்து முன்னூற்றுப் பத்து (இலங்கை ரூபா 900, 944,310) ஆகும்.

சபையின் கட்டளைப்படி,

கோப்பரேட் சேர்விசஸ் ( பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

4-747

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் முன்னைய பெயர் :* சமிட் புரொபெஷனல் சர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் :* பீவீ 89102
*கூட்டிணைப்புத் திகதி :* 2018. 02. 28
*பதிவு முகவரி :* 06 ஆம் மட்டம், திசாரா பிளாஸா, 135, துட்டுகெமுனு வீதி, கொழும்பு 6

*கம்பனியின் புதிய பெயர் :* இன்ட்ரெபிட் குறூப் கழம்பு (பிறைவேட்) லிமிட்டட்

சபையின் கட்டளைப் பிரகாரம்,

கோப்பரேட் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.
இன்ட்ரெபிட் குறூப் கழம்பு
( பிறைவேட்) லிமிட்டட்.

*4-748*

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர் :* பிரவுன் குரொவ் டிரேடிங் (பிறைவேட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் :* பீவீ 130728
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2018. 03. 15
*பதிவு முகவரி :* இல.521, ராஜபக்ஸ எஸ்டேட், தப்போவ, நாத்தாண்டிய

*கம்பனியின் பெயர் :*கொஹு கிரியேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் :* பீவீ 130106
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2018. 02. 22
*பதிவு முகவரி :* இல.352, ராஜகிரிய வீதி, ராஜகிரிய

*கம்பனியின் பெயர் :* கெனுத் என்ஜினியரிங் என்ட் கன்சல்டன்சி (பிறைவேட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் :* பீவீ 130105
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2018. 02. 22
*பதிவு முகவரி :* இல.225, எஸ்வத்த தெற்கு, புவக்பிட்டிய

ஆர். கே. எல். எஸ். கோப்பரேட்
சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

*4-749*

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர் :* ஷின் லிமாகோ என்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் :* பீவீ 130262
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2018. 02. 27
*பதிவு முகவரி :* ''செனரத்'' உடுபில, மிரிஸ்ஸ

கம்பனிச் செயலாளர்.

*4-751*

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர் :* டொப் ரீ.எல்.சி. (பிறைவேட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் :* பீவீ 131126
*பதிவு முகவரி :* 156, 1/5, ஹல்ட்ஸ்டொப் வீதி, கொழும்பு 12

பணிப்பாளர்.

*4-787*

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

*மாத்தறை, பள்ளிமுள்ளை, சம்போதி மாவத்தை, இலக்கம் 27/17 இல் வதியும் தேவசுரேந்திர பிரில் காமினி ஆகிய நான் எனது அற்றோணித்தத்துவதாரராக மாத்தறை கோட்டை, தொடுபொல வீதியில் இலக்கம் 19 இல் வதியும் கொக்கல மரக்கலகே கித்சிறி இராஜ் என்பவரை நியமிக்கப்பட்ட பகிரங்க நொத்தாரிசு மடவிட படபெந்திகே சந்திரிகா சியாமலி நெலும் குமாரி இனால் 2015.01.30ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 491 கொண்ட அற்றோணித் தத்துவம் இத்தால் இரத்துச் செய்து செயல் வலுவற்றதாக்கப்பட்டுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன். மேலும் கூறப்பட்ட விசேட அற்றோணித்தத்துவத்தின் பிரகாரம் இதன் பின்னர் கூறப்பட்ட அற்றோணி தத்துவதாரரினால் செய்யப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் எனது கட்டுப்பாடு அல்லது பொறுப்பு இல்லை எனவும் அறியத்தருகின்றேன்.*

தேவசுரேந்திர பிரில் காமினி .

*4- 614*

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

*பிட்டகோட்டே, ரஜமஹாவிஹார வீதி, ரஜ மாவத்தை, இலக்கம் 36 என்ற முகவரியைச் சேர்ந்த கித்சிறி ஜயலால் கஜதீர ஆராச்சி (தே.அ..அ.இல. 723372798V) என்ற அடையாள அட்டையை உடைய நான் கொழும்பு மேல்நீதிமன்ற வலய எல்லைக்குட்பட்ட பகுதியில் சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான தர்மசிறி குணவர்தன என்பவரால் 2009, ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதியிடப்பட்டு தயாரித்து உறுதிப்படுத்தப்பட்ட 149 ஆம் இலக்க அற்றோணித்தத்து வப்பத்திரத்தின் மூலமாக எனது அற்றோணி தத்துவகாரராக நியமிக்கப்பட்ட பிட்டகோட்டை , ரஜமஹாவிகார*

வீதி, ரஜ மாவத்தை, இலக்கம் 36 என்ற முகவரியைச் சேர்ந்த கஜதீர ஆராச்சிகே பியசேன ( தே.அ.அ.இல. 411371530V) என்ற அடையாள அட்டையை உடைய நபரை நியமித்திருந்தேன், அந்த அற்றோணித்தத்துவப் பத்திரத்தை 2018, மாச்சு மாதம் 28 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் இரத்துச் செய்து அதை செல்லுபடியற்றதாக்கியுள்ளேன் எனவும் அது தொடர்ந்தும் அதற்கான நோக்கங்களுக்காக செயற்படுத்தப்படும் எவ்வித செயற்பாடுகளுக்கும் நான் பொறுப்புக் கூற மாட்டேன் என இலங்கைப் பிரஜைகள் அறிந்து கொள்வதற்காக இதன் மூலம் அறிவிக்கின்றேன்.

கித்சிறி ஜயலால் கஜதீர ஆராச்சி .

4-705

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

அவுஸ்திரேலியா, விக்டோரியா 3150, க்ளேன் வேவலி, ஜோன் வீதி, இல. 10 இல் வசிக்கும் ருவன் குமார ராஜகருணா ராஜபக்ஷ (தே.அ.அ.இல. 751990219V) ஆகிய நான் ,கண்டி, அம்பிட்டிய, பொல்வத்தை, இல. 45 என்ற முகவரியில் வசிக்கும் திசாநாயக்க முதியன்சேலாகே சேனாரத்ன பண்டார விஜேகோன் தே.அ.அ.இல. ( 431101715V) என்பவருக்கு வழங்கப்பட்டதும், ஐக்கிய இராச்சியத்தின் சொலிசிட்டரான திரு. சண்முகம் ரவீன்திரன் என்பவரினால் 2005.03.29 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட அற்றோணித் தத்துவமானது, உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதெனவும், இதன் பின்னர் என் சார்பில் அவர் மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளிற்கும் நான் பொறுப்புதாரியல்ல எனவும் மேலும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அதன் பொது மக்களிற்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

ருவன் குமார ராஜகருணா ராஜபக்ஷ.

4-723

## விசேட அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாண கண்டி மாவட்டத்தில் அம்பிட்டிய தலாத்து ஓய வீதி, வீ.சி. இல.63/1 எனும் முகவரியில் வசிக்கும் செனவிரத்ன முதலிகே சந்திராணி அபயசேகர (தே.அ.அ.இல. 565461907V) ஆகிய என்னால் கண்டி பிரசித்திபெற்ற நொத்தாரிசு எம். யூ.எஸ். விதானகே அவர்களால் 2012.05.03 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்திய 1196 ஆம் இலக்கத்தையுடைய விசேட அற்றோணித்தத்துவம் மூலம் கண்டி, அம்பிட்டிய, தலாத்து ஓய வீதி, இல. 63/1 இல் வசிக்கும் அபேசிங்க ஆரச்சிகே லெனத் எனப்படும் லெனார்ட் அபேசிங்க (தே.அ.அ.இல. 49301992V) என்பவருக்கு வழங்கப்பட்ட விசேட அற்றோணித் தத்துவம் 2018.03.27 ஆந் திகதி இரத்துச் செய்யப்படுகின்றதென பொது மக்களுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் இத்தால் அறியத்தருகின்றேன். இதன் பின்னர் இவ் விசேட அற்றோணித்தத்துவத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற எந்தவித கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பல்ல என்பதனையும் அறியத்தருகின்றேன்.

செனவிரத்ன முதலிகே சந்திராணி அபயசேகர.

வீ.சி. இல. 63/1, தலாத்து ஓய வீதி,
அம்பிட்டிய.

4-738

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் பத்தரமுல்லை, பெலவத்த, லியனகே மாவத்தை, இல. 47/22 ஐச் சேர்ந்தவரும் ஐக்கிய இராச்சியம் , CRO 5PX க்ரொய்டன், சர்ரே , கிறேன்வில் க்ளொஸ், இல. 36 இல் தற்போது வசிப்பவருமாகிய நீல் துஷார லியனகே ஆகிய நான், இத்தால் பொது மக்களுக்கு அறிவித்துக்கொள்வதாவது 2800 ஆம் இலக்க 2009.02.21 ஆந் திகதியிடப்பட்ட கொழும்பு பிரசித்த நொத்தாரிசு டெப்னி சந்திரிக்கா பீரிஸினால் அத்தாட்சிப் படுத்தப்பட்டு பத்தரமுல்லை, மங்கள வீதி, இல. 13ஏ, ஐச் சேர்ந்த வெலிவிட்ட கன்கானமகே லோரனீ சமந்தா வெலிவிட்ட விற்கு என்னால் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் என்னால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுகின்றதாகவும் எனது அற்றோணித்தத்துவதாரராக மேற்படி வெலிவிட்ட கன்கானமகே லோரனீசமந்தா வெலிவிட்டவினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயல் அல்லது கருமங்களுக்கும் இது முதற்கொண்டு அவர்சார்பாக பொறுப்புக்களை ஏற்கப்போவதில்லை என்பதாகும்.

நீல் துஷார லியனகே.

2018.04.04.

4-801

# ஏல விற்பனைகள்

## தேசிய அபிவிருத்தி வங்கி பீ.எல்.சீ.

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான பகிரங்க ஏல விற்பனை*

**இரத்தினபுரி மாவட்டம், எம்பிலிப்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் இல. 207 , மதுவன்வெல கிராம அலுவலர் பிரிவில் திபொல்கெட்டிய கிராமத்தில் எம்பிலிபிட்டி மாதம்பை பிரதான பாதையின் எல்லையில் அமைந்துள்ள மதுவன்வெலஹேன எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் G. W. K. மனம்பேரி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2006.03.02 ஆந் திகதிய 2683 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட லொட் B என அடையாளமிடப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் வசிப்பிட மற்றும் வியாபார மாடிக் கட்டிடங்களும் , மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 01 றூட் பரப்பளவானது.**

**இவ்வாதனம் கொலம்பகேஆரயில் பதிவு அலுவலகம் அமைந்துள்ள மதாரா என்டபிரைசஸ் எனும் பெயர் மகுடத்தின் கீழ் தனி வியாபாரர உரிமையாளராக வியாபாரத்தை நடாத்திச் செல்லும் கொலம்பகே ஆரயில் வசிக்கும் பேந்துருகே நிரன்ஜலா சுதர்ஷினி என்பவர் ஈட்டாளராகவும் பேதுரு ஆரச்சிகே அதுல அமரநாத் மற்றும் அகம்போடிகே சோமாவதி ஆகியோர் கடப்பாடுடைய வர்களாகவும் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.**

**ஆதனத்தை வந்தடைதல்.**- *எம்பிலிப்பிட்டிய பாதையில் மதுவன்வெல 47 ஆம் கி.மீ. கம்பத்தின் அருகில் பாதையின் இடதுபக்கத்தில் இவ்வாதனம் அமைந்துள்ளது.*

**2018.05.15 ஆந் திகதி மு.ப. 11.45மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.**

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- *2018.03.30 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2018.03.16 ஆந் திகதிய "திவயின", "த ஐலண்ட்" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகை களையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு செய்யும் முறை.**- *விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவர்களினால் கீழ்க் காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும்:-*

*(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;*

*(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;*

*(3) ஏலவிற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2.5% (நூற்றுக்கு இரண்டரை சதவீதம்) ;*

*(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;*

*(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 750 ரூபா;*

*(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் 2,500 ரூபா.*

*கொள்முதல் விலையின் மிகுதி 90% , இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படல் வேண்டும்.*

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- *முகாமையாளர், மையப்படுத்தல் (கடன் அறவிடுதல் பிரிவு), தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ , இல. 40, நவம் மாவத்தை, கொழும்பு 2, தொலைபேசி: 011-2448448 .*

*ஐ. டபிள்யூ. ஜயசூரிய,*
*நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற ஏல விற்பனையாளர்.*

*இல.369/1,*
*துட்டுகெமுனு மாவத்தை,*
*லேவேல்ல பாதை,*
*மாவில்மட, கண்டி.*
*தொலைபேசி இல.: 071- 8446374, 071- 4962449.*
*தொலைநகல் இல.: 081-2210595.*

*4- 695*

---

## தேசிய அபிவிருத்தி வங்கி பீ.எல்.சீ.

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான பகிரங்க ஏல விற்பனை*

**இரத்தினபுரி மாவட்டம், எம்பிலிப்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் இல. 214 , கலகெடிஆர கிராம அலுவலர் பிரிவில் பல்லேகம கிராமத்தில் அமைந்துள்ள காணி நிலஅளவையாளர் நாயத்தின் 1985.02.08 ஆந் திகதிய FVP 779 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட லொட் 939 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டும் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் G.W.K. மனம்பேரி என்பரினால் தயாரிக்கப்பட்ட 2013.11.14 ஆந் திகதிய 6396 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட லொட் 01 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் வீட்டுக் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 79.9 பேர்ச். பரப்பளவானது.**

**இவ்வாதனம் கொலம்பகேஆரயில் பதிவு அலுவலகம் அமைந்துள்ள மதாரா என்டபிரைசஸ் எனும் மகுடத்தின் கீழ் தனி வியாபார உரிமையாளராக வியாபாரத்தை நடாத்திச் செல்லும் கொலம்பகே ஆரயில் வசிக்கும் பேந்துருகே நிரன்ஜலா சுதர்ஷினி என்பவர் ஈட்டாளராகவும் பேதுரு**

**ஆரச்சிகே அதுல அமரநாத் மற்றும் அகம்பொடிகே சோமாவதி ஆகியோர் கடப்பாடுடையவர்களாகவும் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.**

**ஆதனத்தை வந்தடைதல்.-** எம்பிலிப்பிட்டிய பல்லேகம சந்தியிலிருந்து மொரகெட்டிய பாதையில் 2.4கி.மீ. தூரம் சென்று 4 ஆம் ஓடை பாதைக்குத் திரும்பி அப்பாதையில் சுமார் 250 மீற்றர் தூரம் சென்று இடதுபக்கமாக திரும்பி மேலும் சுமார் 300 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனத்தை அடையலாம்.

**2018.05.15 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.**

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-** 2018.03.30 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2018.03.16 ஆந் திகதிய "திவயின", "த ஐலன்ட்" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகை களையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.-** விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவர்களினால் கீழ்க் காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;

(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;

(3) ஏலவிற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2.5% (நூற்றுக்கு இரண்டரை சதவீதம்) ;

(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;

(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 750 ரூபா;

(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் 2,500 ரூபா.

கொள்முதல் விலையின் மிகுதி 90% , இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.-** முகாமையாளர், மையப்படுத்தல் (கடன் அறவிடுதல் பிரிவு), தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ, இல. 40, நவம் மாவத்தை, கொழும்பு 2, தொலைபேசி: 011-2448448 .

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்
பெற்ற ஏல விற்பனையாளர்.

இல.369/1,
துட்டுகெமுனு மாவத்தை,
லேவேல்ல பாதை,
மாவில்மட, கண்டி.
தொலைபேசி இல.: 071- 8446374, 071- 4962449.
தொலைநகல் இல. : 081-2210595.

4- 696

---

**தேசிய அபிவிருத்தி வங்கி பீ.எல்.சீ.**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான பகிரங்க ஏல விற்பனை*

*மிகவும் பெறுமதிமிக்க சகல வசதிகளையும் கொண்ட தென்னை பயிரிடப்பட்ட காணி*

**குருநாகல் மாவட்டம், பிங்கிரிய சபை எல்லைக்குட்பட்ட கனேகொட கிராமத்தில் அமைந்துள்ள "புனித அந்தோனியார் எஸ்டேட் மற்றும் வத்தே கும்புர" எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் A.V. லியனகே என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2013.03.09 ஆந்திகதி 2157 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட லொட் 01 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 14 ஏக்கர் 03 றூட் பரப்பளவானது.**

**மேற்கூறிய இல. 2157, வரைபடத்தில் குறிக்கப்பட்ட லொட் இல. 05 பாதையின் மீதும் ஊடாகவும் மேலாகவும் நடந்து மற்றும் வாகன போக்குவரத்திற்காக உபயோகிக்கும் முழு உரிமையுடன் ஆகும்.**

**இவ்வாதனம் கொச்சிக்கடையில் வசிக்கும் கிரிஷான் டிஹான் பெரேரா என்பவர் கடப்பாடுடையவராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.**

**ஆதனத்தை வந்தடைதல்.-** பிங்கிரிய கிராமத்தில் பொது பஸ் தரிப்பிடத்திலிருந்து வாரியபொல பாதையில் சுமார் 7.5 கி.மீ. தூரம் ஹபவெவ சந்தி வரை ( 25 ஆம் கி.மீ. கம்பத்திற்கு சுமார் 400 மீற்றருக்கு முன்) வந்து வலது பக்கமாகவுள்ள கனேகொட பாதைக்கு பிரவேசித்து அப்பாதையில் சுமார் 1.6 கி.மீ. தூரம் சென்று இடதுபக்கமாகவுள்ள பிரதேச சபை மணற் பாதையூடாக சுமார் 700 மீற்றர் தூரம் சென்று மீண்டும் இடதுபக்கமாக திரும்பி காணித்துண்டுகளை நோக்கி சுமார் 200 மீற்றர் தூரம் சென்றதன் பின்னர் ஆதனத்திற்கு தென்படும் பாதையில் சுமார் 150 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் அமைந்துள்ளது.

**2018.05.10 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.**

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-** 2018.02.23ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2018.02.14 ஆந் திகதிய "திவயின", "த ஐலன்ட்" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகை களையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.-** விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவர்களினால் கீழ்க் காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;

(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;

(3) ஏலவிற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2.5% (நூற்றுக்கு இரண்டரை சதவீதம்) ;

(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;

(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 1,000 ரூபா;

(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் 2,000 ரூபா.

கொள்முதல் விலையின் மிகுதி 90% , இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.-** முகாமையாளர், மையப்படுத்தல் (கடன் அறவிடுதல் பிரிவு), தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ , இல. 40, நவம் மாவத்தை, கொழும்பு 2, தொலைபேசி: 011-2448448 .

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்
பெற்ற ஏல விற்பனையாளர்.

இல.369/1,
துட்டுகெமுனு மாவத்தை,
லேவேல்ல பாதை,
மாவில்மட, கண்டி.
தொலைபேசி இல.: 071- 8446374, 071- 4962449.
தொலைநகல் இல.:081-2210595.

4- 697

---

**டீஎப்சீசீ வங்கி பீ.எல்.சீ.**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான பகிரங்க ஏல விற்பனை*

**வசிப்பிடத்திற்குப் பொருத்தமான மிகவும் பெறுமதிமிக்க சொத்து, நுவரெலியா மாவட்டத்தில் அம்பகமுவ கோரளை அம்பகமுவ பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ரொசெல்ல கிராமத்தில் அமைந்துள்ள "வுட்லன்ட் எஸ்டேட்" எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் இரந்ததிஸ்ஸ கொட்டம்பகே என்பவரினால் தாயரிக்கப்பட்ட 2005.12.27 ஆந் திகதிய 1145A / 2005 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 01 எனும் காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 12 பேர்ச்சஸ் பரப்பளவானது.**

**இவ்வாதனம் வட்டவலையிலுள்ள " அரவிந்த கன்ஸ்ட்ரக்ஷன் என்ட் சப்லை" எனும் பெயர் மகுடத்தின் கீழ் வியாபாரத்தை நடாத்திச் செல்லும் சிவப்பிரகாசம் கல்யாணி அல்லது திருச்செல்வம் கல்யாலணி மற்றும் தர்மபுத்திரன் முரளிதரன் ஆகியோர் கடப்பாடுடையவர்களாக டீஎப்சீசீ வங்கி பீஎல்சீ சார்பாக கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு சஞ்சீவ பிரசன்ன பொன்சேகா என்பவரினால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2016.04.19 ஆந் திகதிய 2547 ஆம் இலக்க முறியின் மூலம் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.**

**ஆதனத்தை வந்தடைதல்.-** ஹற்றன் நகர மத்தியலிருந்து கினிகத்தேனை பாதையில் சுமார் 05 கி.மீ. தூரம் ( மதகு இல. 68/4 இற்கும் மதகு இல. 69/3 இற்கும் இடையில்) சென்றால் இவ்வாதனம் பாதையில் வலது பக்கத்தில் அமைந்துள்ளது.

**2018.05.18 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.**

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-** 2017.12.08 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2017.11.24 ஆந் திகதிய "திவயின", "த ஐலன்ட்" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகை களையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.-** விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவர்களினால் கீழ்க் காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;

(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;

(3) ஏலவிற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2.5% (நூற்றுக்கு இரண்டரை சதவீதம்) ;

(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;

(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 750 ரூபா;

(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் 2,000 ரூபா.

கொள்முதல் விலையின் மிகுதி 90% , இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படல் வேண்டும்.மேற்கூறிய ஏல விற்பனையை அறிவித்தலின்றி இடைநிறுத்த அல்லது ரத்துச் செய்ய வங்கிக்கு உரிமை உண்டு.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.-** முகாமையாளர், மையப்படுத்தல் (கடன் அறவிடுதல் பிரிவு), தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ , இல.73, இராமநாயக்க மாவத்தை, கொழும்பு 2, தொலைபேசி: 011-2371371 .

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்
பெற்ற ஏல விற்பனையாளர்.

இல.369/1,
துட்டுகெமுனு மாவத்தை,
லேவேல்ல பாதை,
மாவில்மட, கண்டி.
தொலைபேசி இல.: 081-2210595,071- 8446374, 071- 4962449.

4- 694

## கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ

*அம்பலாந்தோட்டக் கிளை*

**பகிரங்க ஏல விற்பனை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் பீகியூ 116) மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்-*

**தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், திக்வெல்ல பிரதேச சபை எல்லையில் தொடம்பஹல மேற்கு கிராம அலுவலர் பிரிவில் வெல்லபடபத்து தொடம்பஹல கிராமத்தில் அமைந்துள்ள பட்டபெந்திகேவத்த என்றழைக்கப்படும் காணிக்கு நிலஅளவையாளர் பி.ஜீ. கருணாதாச 2009.11.08 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 2752 இல் காட்டப்பட்ட லொட் 1.**

**இக்காணியின் விஸ்தீரணம்: 0ஏ. 2றூ.0பே.**

**இக்காணியில் உள்ள கட்டிடங்கள், மரங்கள் எல்லாம் சேர்த்து**

**கடன் எடுத்த தரிந்து ஜனக பிரதாபசிங்க மற்றும் திப்பல கமகே சுவர்ணலதா குணவர்தன மற்றும் காணியை ஈடுவைத்த தரிந்து ஜனக பிரதாபசிங்க மேற்படி காணியை கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடு வைத்துள்ளார்.**

**மேல் சொல்லப்பட்ட காணிகளை 2018, மே மாதம் 07 ஆந் திகதி காலை 11.00 மணிக்கு என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.**

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-** *2015.02.13ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், ''லக்பிம'', ''த ஐலண்ட்'' மற்றும் ''வீரகேசரி'' பத்திரிகைகளையும், ஏல விற்பனை விளம்பரத்துக்காக 2017.11.02 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியும் மற்றும் 2017.11.02 ஆந் திகதியுடைய ''லக்பிம'', ''தஅயிலன்ட்'' மற்றும் ''வீரகேசரி ''ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**ஆதனத்திற்கு செல்லும் விதம்.-** *திக்வெல்ல நகரத்திலிருந்து தங்கல்ல வீதியில் (மஹவெல ஊடாக) 182 கி.மீற்றர் கல்வரை (விஜித சென்ரல் கல்லூரியைத் தாண்டி ) சென்று மேலும் 2 கி.மீ. சென்று மேலும் 100 மீற்றர் சென்றால் குறித்த காணியை அடையமுடியும். இக்காணி வீதிக்கு வலது பக்கம் உள்ளது. ( சயலின சேர்விஸ் சென்டர்)*

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.-** *உத்தேசக் கொள்வன வாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :-*

*(1) கொள்வனவு விலையின் 10% ;*
*(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;*
*(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;*
*(4) நொத்தாரிசு கட்டணம் 2,000 ரூபா ;*
*(5) இலிகிதர் கட்டணம் 500 ரூபா ;*
*(6) ஏல விற்பனைக்காக செலவுசெய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;*
*(7) VAT வரி;*

*கொள்வனவு விலையின் மிகுதி 90% கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பிரதான அலுவலகம் அல்லது அம்பலாந்தோட்டை கிளையில் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்த வேண்டும்.*

**வேறு விபரங்களுக்காக.-**
*முகாமையாளர்,*
*கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ,*
*இல. 157,*
*திஸ்ஸ வீதி, அம்பலாந்தோட்ட.*
*தொலைபேசி இல. 047- 2223819.*
*தொலைநகல் இல. 047- 2223817.*

*எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),*
*சிரேஷ்ட உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பீட்டாளர்,*
*நீதிமன்ற ஆணையாளர்.*

*இல. 200,*
*2 ஆவது மாடி,*
*புதுக்கடை வீதி,*
*கொழும்பு 12.*

*தொலைபேசி/தொலைநகல் இல. 011-2445393.*
*மின்னஞ்சல் :* senaservice @ sltnet.lk

*4-740*

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ –சிலாபம் கிளை

*(முன்பு ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டட் என அழைக்கப்பட்டது)*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் பெறுமதி மிக்க ஆதனம் பகிரங்க ஏல விற்பனை*

**கடன் எடுத்த வீவிட்ட விதானலாகே தோன் ஜீவன (இவ் அட்டவணையில் 1 வது சொல்லப்பட்ட காணி) சிலாபம் பிரசித்த நொத்தாரிசு எம்.ஏ.எஸ். மெதகொடவின் முறி இலக்கங்களாவன: 6239, 7150, 9968, 11373 , 2005.01.14, 2006.04.26, 2010.11.11, 2013.08.27 ஆந் திகதிய மற்றும் சிலாபம் பிரசித்த நொத்தாரிசு எஸ்.எம்.என். கீகாணியின் முறி இலக்கங்கள்: 366 மற்றும் 889, 2014.03.11 மற்றும் 2015.07.06ஆந் திகதியில் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும்.**

**மேலும் மேல் சொல்லப்பட்ட கடன் எடுத்த (இவ் அட்டவணையில் 2 வது சொல்லப்பட்ட காணி சம்பந்தமாக) சிலாபம் பிரசித்த நொத்தாரிசு எஸ்.ஏ.ஈ.பின்ட்டோவின் 2008.04.10 ஆந் திகதியுடைய முறி இலக்கங்கள்: 5439 மற்றும் சிலாபம் பிரசித்த நொத்தாரிசு எம்.ஏ.எஸ். மெதகொடவின் 2011.10.20 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 10491 மற்றும் 2013.08.27 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 11375 மற்றும் சிலாபம் பிரசித்த நொத்தாரிசு எஸ்.எம்.என். கீகாணியின்**

**2015.07.06 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 888 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும்.**

**மேலும் அத்துடன் மேல் சொல்லப்பட்ட கடன் எடுத்தவர் (இவ் அட்டவணையில் 3 வது சொல்லப்பட்ட காணி சம்பந்தமாக) மாரவில பிரசித்த நொத்தாரிசு எச்.ஜே.எம்.டி. ஜயசிங்கவின் 2016.10.12 ஆந் திகதியுடைய ஈட்டு முறி இலக்கங்கள்: 24259 மூலம் ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீ ஈடு வைத்து செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும், மேலும் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி,**

மிகுதி முற்பணமும் வட்டியும் ஏலதாரரின் சொல்லப்பட்ட செலவுகளும் மற்றைய கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக இக்கீழ் சொல்லப்பட்ட காணிகளை என்னால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

கீழ் விபரிக்கப்பட்ட காணிகளைஎன்னால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

1 வது அட்டவணை - 4ஏ-1று-39பே
2018, மே மாதம் 09 ஆந் திகதி காலை 11.30 மணிக்கு

2 வது அட்டவணை - 2ஏ-0று-0பே
2018, மே மாதம் 09 ஆந் திகதி பிற்பகல் 12.30 மணிக்கு

3 வது அட்டவணை - 2ஏ-3று-6.78பே
2018, மே மாதம் 09 ஆந் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு

### 1 வது அட்டவணை

வட மேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், புத்தளம் பதிவு எல்லையில் புத்தளம் பத்து குமார வன்னி பலாத்த ராஜகுமார வன்னி பத்து அன்குண்வில கிராமத்தில் அமைந்துள்ள துணுமடலகா வத்த காணிக்கு நில அளவையாளர் ஜே.ஏ.வி. ராஜநாயகம் 2004.12.21 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 5048 இல் காண்பிக்கப்பட்ட லொட் 1.

### இக்காணியின் விஸ்தீரணம்

4ஏ-1றா- 39 பே அல்லது ஹெக்டயார் 1.8185
இக்காணியில் உள்ள மரங்கள், தாவரங்கள் எல்லாம் சேர்த்து

### 2 வது அட்டவணை

வட மேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், சிலாபம் பதிவு எல்லையில் ஆணைவிலுந்து பத்து பிட்டிகல் கோரல வடக்கு பலாம மாவட்ட செயலாளர் எல்லையில் தேவாலயன்திய கிராம அலுவலர் தொகுதியில் வில்பொத்த கிராமத்தில் உள்ள வில்பொத்த முகலான காணிக்கு நில அளவையாளர் டி. பாலசந்திரனின் 2008.01.31 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம்: 234 இல் காண்பிக்கப்பட்ட லொட் 01.

### இக்காணியின் விஸ்தீரணம்

2ஏ-0றா- 0 பே. அல்லது ஹெக்டயார் 0.8094
இக்காணியில் உள்ள மரங்கள், தாவரங்கள் எல்லாம் சேர்த்து

### 3 வது அட்டவணை

வட மேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், புத்தளம் பதிவு எல்லையில் புத்தளம் பத்து கோரளையில் ராஜகுமார வன்னி பத்து ஆணமடுவ பிரதேச சபை எல்லையில் மாதுப்பு கட்டரவ மாவட்டச் செயலாளர் எல்லையில் இலக்கம்: 611 D மாசெம்குளிய கிராம அலுவலர் தொகுதியில் அக்குணவில கிராமத்தில் உள்ள லுனுமித்தல்லகா வத்த காணியின் நில அளவையாளர் எச்.எம்.எஸ்.கே. ஹெரத் 2015.12.15 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 2709 இல் காண்பிக்கப்பட்ட லொட் 1.

### இக்காணியின் விஸ்தீரணம்

2ஏ-3றா-6.78பே .
இக்காணியில் உள்ள மரங்கள், தாவரங்கள் எல்லாம் சேர்த்து

தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்காக 2017.09.08 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2017.09.14 ஆந் திகதியுடைய லக்பிம, டெயிலிமிரர் மற்றும் தினக்குரல் பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணிக்கு செல்லும் விதம் :**

**முதலாவது அட்டவணை**

சிலாபம் நகரத்தில் இருந்து 23 கி.மீ. புத்தளம் ரோட்டில் கீரியன்கல்லிய சந்தி வரை சென்று வலதுபக்கம் திரும்பி 2.4 கி.மீற்றர் ஆண்டிகம ரோட்டில் சென்ற பிறகு இக்காணி இந்த ரோட்டில் இடதுபக்கம் அமைந்துள்ளது.

**இரண்டாவது அட்டவணை**

23 கி.மீற்றர் சிலாபம் நகரத்தில் இருந்து புத்தளம் ரோட்டில் கிரியன்கல்லிய வரை சென்று சந்தியில் இருந்து வலதுபக்கம் திரும்பி 6 கீ.மீற்றர் ஆண்டிகம ரோட்டில் தேவால சந்தி வரை சென்று வலது பக்கம் திரும்பி 800 மீட்டர் வில்பொத்த ரோட்டில் ஒரு டிரான்ஸ்போமர் வரை சென்று இடதுபக்கம் திரும்பி 200 மீற்றர் பாலம் ரோட் வரை சென்று பிறகு இடதுபக்கம் காணி இந்த ரோட் முன்பாக உள்ளது.

**மூன்றாவது அட்டவணை**

கொழும்பு-புத்தளம் ரோட்டில் 100 கி.மீற்றர் கல்வரை சென்று வலது பக்கம் திரும்பி ஆண்டிகம ரோட்டில் 2 கி.மீற்றர் சென்றால் காணி இடது பக்கம் உள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.**-உத்தேச கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) உள்ளூர் அதிகார சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;
(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2 % (நூற்றுக்கு இரண்டரை);
(4) விற்பனைச் சான்றிதழுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2000 ரூபா ;
(5) இலிகிதர் கட்டணம் 500 ரூபா;
(6) விற்பனை சம்பந்தமாக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்;

*மிகுதி 90% ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் பணமாக வங்கிக்கு செலுத்த வேண்டும். செலுத்தத் தவறினால் கொடுக்கப்பட்ட 10% மீண்டும் திருப்பி செலுத்தப்படமாட்டாது. காணி மீண்டும் ஏலத்தில் விடப்படும்.*

***உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.*** *- ''சிரேஷ்ட முகாமையாளர் (கடன் அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10'' உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2664664.*

*எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
சிரேஷ்ட உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.*

*இல. 200,
2 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.*

*தொலைபேசி இல. : 011-2396520, 011- 2445393.
தொலைநகல் இல. : 011-2445393
மின்னஞ்சல் :* senaservice @ sltnet.lk

*4-745*

---

## கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ- மீரிகமைக் கிளை

*பகிரங்க ஏல விற்பனை*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் பீகியூ 116) மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்-*

***1 ஆவது அட்டவணை***

***மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், தாசியபத்து அலுத்குரு கோரளையில் திவுலப்பிட்டிய மாவட்ட செயலாளர் எல்லையில் வெவகெதர கிராம அலுவலர் எல்லையில் திவுலப்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள கட்டுவெயேன காணிக்கு நிலஅளவையாளர் கே. கன்னங்கரவின் 2003.11.19 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 1120/ 2003 இல் காண்பிக்கப்பட்ட காணி.***

***இக்காணியின் விஸ்தீரணம் 0ஏ.0றூ.22.8பே.
இக்காணியிலுள்ள கட்டிடங்கள், மரங்கள் மற்றும் எல்லாம் சேர்த்து***

***2 ஆவது அட்டவணை***

***வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம் , குளியாப்பிட்டிய பதிவு எல்லையில் கட்டுகம்பொல அத்பத்து பிட்டிகல் கோரளையில் பால மாகன்தர கிராமத்தில் அமைந்துள்ள டிக்பில்லாவ காணிக்கு நிலஅளவையாளர் ஆர். ஏ. சந்திரரத்னவின் 1998.04.30 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 1785 இல் காண்பிக்கப்பட்ட காணி.***

***இக்காணியின் விஸ்தீரணம் 0ஏ.2றூ.15பே.
இக்காணியிலுள்ள கட்டிடங்கள், மரங்கள் மற்றும் எல்லாம் சேர்த்து***

***3 ஆவது அட்டவணை***

***வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம் , குளியாப்பிட்டிய பதிவு எல்லையில் கட்டுகம்பொல அத்பத்து பிட்டிகல் கோரளையில் பால மாகன்தர கிராமத்தில் அமைந்துள்ள டிக்பில்லவே வத்த என்ற காணிக்கு நிலஅளவையாளர் எஸ்.பி.அபே கோன் 2004.08.20 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 1785 இல் காண்பிக்கப்பட்ட காணி.***

***இக்காணியின் விஸ்தீரணம் 0ஏ.2றூ.6.5பே.
இக்காணியிலுள்ள கட்டிடங்கள் எல்லாம் சேர்த்து***

***4 ஆவது அட்டவணை***

***மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், தாசியபத்து அலுத்குரு கோரளையில் திவுலப்பிட்டிய மாவட்ட செயலாளர் எல்லையில் பொம்புகம்மன்ன இலக்கம் 97A கிராம அலுவலர் எல்லையில் பொம்புகம்மன்ன கிராமத்தில் உள்ள காட்டகாவத்த அல்லது மில்லகாலந்த காணிக்கு நிலஅளவையாளர் எஸ். செனரத் 2005.03.30 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 2582 இல் காண்பிக்கப்பட்ட லொட் 1 .***

***இக்காணியின் விஸ்தீரணம் 0ஏ.0றூ.1.82பே.
இக்காணியிலுள்ள கட்டிடங்கள் எல்லாம் சேர்த்து***

*1ஆவது, 2ஆவது, 3ஆவது மற்றும் 4ஆவது அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணிகள் கடன் எடுத்த வலன்கொடகே நளின் அன்டன் ரவீன்தர ரணவீர அல்லது லவன்கொடகே நளின் அன்டன் ரவீன்தர ரணவீர கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடு வைத்துள்ளார்.*

**மேற்சொல்லப்பட்ட காணிகளை என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.**

*1வது அட்டவணை காணி (0ஏ. 0றூ. 22.8பே.)
2018 ,மே மாதம்11ஆந் திகதி மு.ப 11.00 மணிக்கு*

*4வது அட்டவணை காணி (0ஏ. 0றூ. 1.82பே.)
2018 ,மே மாதம்11ஆந் திகதி மு.ப 11.30 மணிக்கு*

*3வது அட்டவணை காணி (0ஏ. 2றூ. 6.5பே.)
2018 ,மே மாதம்11ஆந் திகதி பி.ப 2.00 மணிக்கு*

*2வது அட்டவணை காணி (0ஏ. 2றூ. 15பே.)
2018 ,மே மாதம்11ஆந் திகதி பி.ப 2.30 மணிக்கு*

***தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்காக.***- 2017.06.23 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியும், லக்பிம, த அயிலண்ட் மற்றும் வீரகேசரி பத்திரிகைகளையும், ஏல விற்பனை விளம்பரத்திற்காக 2018.04.20 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியும், 2017.08.01 ஆந் திகதியுடைய லக்பிம, த அயிலண்ட் மற்றும் வீரகேசரி பத்திரிகைகளை பார்க்கவும்.

**காணிக்கு செல்லும் விதம்.**- 1 ஆவது அட்டவணை
திவுலப்பிட்டிய மணிக்கூட்டு கோபுரம் அருகில் இருந்து மினுவான்கொட ரோட்டில் 100 மீற்றர் சென்று காணியை காண முடியும். இக்காணி வலது பக்கம் உள்ளது.

2 ஆவது அட்டவணை.-
மாகன்தர சந்தியில் இருந்து குளியாபிட்டிய ரோட்டில் 900 மீற்றர் சென்று வலது பக்கம் திரும்பி ரோட்டில் 150 மீற்றர் சென்ற பிறகு காணி வலது பக்கம் உள்ளது.

3 ஆவது அட்டவணை.-
மாகன்தர சந்தியில் இருந்து குளியாபிட்டிய ரோட்டில் 900 மீற்றர் சென்று வலது பக்கம் உள்ள ரோட்டில் 75 மீற்றர் தூரம் சென்று காணியை அடைய முடியும்.

4 ஆவது அட்டவணை.-
திவுலப்பிட்டிய மணிக்கூட்டு கோபுரம் சந்தியில் இருந்து மினுவான்கொட ரோட்டில்20 மீற்றர் சென்று காணியை இந்த ரோட்டில் இடதுபக்கம் காணமுடியும்.

**கொடுப்பனவு செலுத்தும் விதம்.**- உத்தேச கொள்வன வாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;
(4) நொத்தாரிசு கட்டணம் 2,000 ரூபா ;
(5) இலிகிதர் கட்டணம் 500 ரூபா ;
(6) ஏலத்திற்காக செலவுசெய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;
(7) VAT வரி;

மிகுதி 90% ஏலத்திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பிரதான அலுவலகம் அல்லது மீரிகம கிளையில் செலுத்த வேண்டும்.

***வேறு விபரங்களுக்காக.***- மூத்த முகாமையாளர், கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, இல: 93, கிரிஉல்ல வீதி, மீரிகம.
தொ.பே: 033-2274312-3, தொலைநகல் : 033-2274314.

எல்.பி.சேனாநாயக்க
சமாதான நீதவான்
மூத்த உத்தரவுபெற்ற ஏலதாரர்
விலைமதிப்பிடுபவர், நீதிமன்ற
ஆணையாளர்.
இல: 200, இரண்டாவது மாடி, புதுக்கடை வீதி, கொழும்பு-12
தொலைபேசி/பெக்ஸ்: 011-2445393
மின்னஞ்சல்: senaservice@sltnet.lk

4-746

## ஹட்டன் நஷனல் வங்கி ப.வ.க. — கொள்ளுப்பிட்டி கிளை

(முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி என அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

***பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு (மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை, பள்ளே பற்று மற்றும் மஹரகமை நகர சபை எல்லைகளுக்குள் , பத்திரகொடையில் அமைந்துள்ளதும் விஹாரவத்தை வீதி, வரிமதிப்பு இல. 17 ஐக் கொண்டதும் "தெல்கஹவத்தை" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம்.ஏ. ஜயரத்ன அவர்களால் தயாரிக்கப்பட்டு 2003, சனவரி 19 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 4065 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1ஏ 2 என அடையாளமிடப்பபட்டதுமான காணியினது) அதன்கண் அமைந்துள்ள கட்டிடம் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து ஏல விற்பனை***

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0று. 9.2பே.)***

*(கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு பீ. என்.பி. பெரேரா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2007, மாச்சு மாதம் 23 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 2988 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் பிணையாக அடைமானம் மற்றும் ஈடு என கடப்பாடுடையவரான தொன் புத்திக தினேஷ் குணசேக்கர இற்கு அளிக்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹட்டன் நஷனல் வங்கி ப.வ.க. இற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள ஆதனம்)*

***ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.***- மஹரகமை நாவின்னை சந்தியிலிருந்து மிரியான வீதி வழியே பண்டாரநாயக்க ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனம் வரை ஏறக்குறைய 1 கிலோமீற்றர் சென்று பத்திரகொடை வீதிக்கு வலப்பக்கம் திரும்பி ஏறக்குறைய 500 மீற்றர் சென்று விஹாரவத்தை வீதிக்கு இடப்பக்கம் திரும்பி ஏறக்குறைய 100 மீற்றர் செல்ல இடப்பக்கத்தில் உள்ள விற்பனைக்குரிய ஆதனத்தை ( நாற்சந்திக்கு முன்னர் 25 மீற்றர்) அடையலாம்.

மேலே விவரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை 2018, மே 16 ஆந் திகதி புதன்கிழமை மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் நாம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வோம்.

***தீர்மான அறிவித்தலுக்கு.***- 2016, மே 13ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2016, மே 16 ஆந் திகதிய "லக்பிம", "தினக்குரல்" மற்றும் "டெயிலி மிரர்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாகச் செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தவேண்டிய உள்ளூர் அதிகார சபை வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் மீது 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் 500 ரூபா ;
(5) விற்பனைச் செலவு மற்றும் வேறேதேனும் கட்டணங்கள் (எவையேனும் இருப்பின்) ;
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டிய இலங்கை அரசினால் அல்லது வேறேதேனும் அதிகார சபையினால் அமுலாக்கப்பட்டு எப்போதும் ஏற்புடைத்தான கட்டணங்கள், வரிகள், வரிக்கட்டணங்கள் அல்லது வேறேதேனும் வரிகள் ஆகியவற்றுடன் சேர்த்து கொள்வனவு விலையின் மிகுதி 90%.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங் களையும் "கொழும்பு 10, ரீ. பி. ஜயா மாவத்தை, இல. 479, ஹற்றன் நஷனல் வங்கி ப. வ. க., உதவிப் பொது முகாமையாளர் - அறவீடுகள்" அவர்களிடம் பார்வையிட முடியும். தொலைபேசி இல. : 011-2661816 ; தொலைநகல் இல. 011-2661835.

டல்லாஸ் கெலார்ட்ஸ்,
உத்தரவுபெற்ற ஏலதாரர்.

இல. 146/3, கல்தேரா கார்டின்ஸ்,
துட்டுகெமுனு தெருவிற்கப்பால்,
கொஹுவளை.
தொலைபேசி இல. : 011-4302622, 011-4302623.
தொலைநகல்: 011- 2856013.

4-784

---

## பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் ப.வ. க.

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**காணித்துண்டு முழுவதும் (மத்திய மாகாணம், கண்டி மாவட்டம் (கண்டி பதிவுப் பிரிவிற்குள்) உடுநுவர பிரதேச சபை எல்லைகளுக்குள், உடுநுவர பிரதேச செயலாளர் பிரிவு, பட்டுபிட்டி கிராம அலுவலர் பிரிவு, பட்டுபிட்டியில் அமைந்துள்ளதும், "குருபாஹுரேஹேன" என அழைக்கப் படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ரீ.பி. அத்தநாயக்க அவர்களால் தயாரிக்கப்பட்டு 1997.04.20 (2014.10.14 ஆந் திகதியன்று கையொப்பமிடப்பட்ட) திகதியிடப்பட்ட வரைபடம் இல. 6997 ஏ இல் குறிப்பிடப்பட்ட துண்டு 10 என அடையாளமிடப்பட்டுள்ள காணியினது) ஏலவிற்பனை**

**(காணியின் விஸ்தீரணம்: 0ஏ.0றூ.27.06 பே.)**

*(கடப்பாடுடையவர்களான/ஈடுவைத்தவரான மொஹம்மட் ரபீக் மொஹம்மட் மஃஜுட், கண்டியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு என். வீகொடபொல அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2015.03.19 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 1390 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள்)*

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி**.- கெலிஓயா பசாரிலிருந்து தவுலாகலை வீதி வழியே பூவெலிக்கடை சந்திவரை சென்று, வட்டுதெனிய வீதிக்கு இடப்பக்கம் திரும்பி மேலும் 400 மீற்றர் (கல்வெட்டு 3/4 வரை) சென்று மோட்டார் வண்டி செல்லக்கூடிய கொங்கிறீட் வீதிக்கு இடப்பக்கம் திரும்பி விற்பனைக்குரிய காணியை அடைவதற்கு 100 மீற்றர் செல்லவும்.

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ், மேற்குறிப்பிடப்பட்ட ஆதனங் களை முறையே 2018, மே 14 ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

***தீர்மான அறிவித்தலுக்கு***.- 2016.12.16 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் அதே திகதிய "டெய்லி நியுஸ்", "லக்பிம" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்**.- பின்வரும் தொகைகளை ஏலதாரருக்கு காசாக செலுத்த வேண்டும் :-

1. கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
2. உள்ளூர் அதிகாரசபை கட்டணங்கள் 1% மற்றும் அதே போன்று பெ.சே.வ. கட்டணங்கள் ;
3. ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2.5% (இரண்டரை வீதம்) ;
4. மொத்த விற்பனை செலவு மற்றும் வேறு கட்டணங்கள்;
5. விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தும் கட்டணங்கள் (ரூபா 3,000).

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்கு செலுத்த வேண்டும் சொல்லப்பட்ட தொகை மேற்குறிப்பிட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10%ஐத் தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங்களையும் " கொழும்பு 3, காலி வீதி, இல் 450, தலைமை அலுவலகம், பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. முகாமையாளர் அறவீடுகள்" அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 011- 4667218.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்ற ஆணையாளர், விலை மதிப்பிடுநர்
மற்றும் உத்தரவுபெற்ற ஏலதாரர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல வீதி,
மாவில்மடை,
கண்டி.

தொலைபேசி /தொலைநகல் இல.: 081- 2210595.
செல்லிட தொலைபேசி இல. 071-8446374.

4-795

## பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் ப.வ. க.

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

***காணித்துண்டு முழுவதும்( ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், மொனறாகலை பிரதேச செயலாளர் பிரிவினுள், வெடிரட்ட கோரளை, புத்தளை, மொணறாகலை கிராம அலுவலர் பிரிவு, மூப்பனே கிராமத்தில் அமைந்துள்ளதும் "எகொடவத்தை என்ற எகொடவத்தைஹேன" என அழைக்கப் படுவதும் அறியப்படுவதுமான காணியினது; இக்காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பி. ஜீ. சீ. புஷ்பகுமார அவர்களால் தயாரிக்கப்பட்டு 2010.11.28 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 5557 இல் குறிப்பிடப்பட்ட துண்டு 1 (உத்தரவு பெற்றநில அளவையாளர் பி.பீ. புஷ்பகுமார அவர்களால் தயாரிக்கப்பட்டு 2005.03.13 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. எம்ஓ/ 630 இல் துண்டு 8 இன் மீள் நிலஅளவையாக இருக்கின்ற) என குறிப்பிடப்பட்டுள்ள காணியினது மொணறாகலை மாவட்ட காணிப்பதிவகத்தில் ஏ 03/36 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.) ஏலவிற்பனை***

***(காணியின் விஸ்தீரணம்: 0ஏ.0றூ.10பே.)***

*(கடப்பாடுடையவர்களான/ஈடுவைத்தவரான குணதலாவே கெதர ஷானக லக்மால் செனவிரத்ன அத்துடன் கடப்பாடுடையவர்களான கெளும் மதுஷங்க செனவிரத்ன மற்றும் குணதலாவே கெதர செனவிரத்ன ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு அஜித் லியனஆரச்சி அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2016.11.30 ஆம் திகதியிடப்பட்ட முதன்மை ஈட்டு முறி இல. 1783 மற்றும் 2017.02.15 ஆந் திகதியிடப்பட்ட மேலதிக ஈட்டு முறி இல. 1875 ஆகியவற்றின் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள்)*

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.**- மொணராகலை நகரின் பிரதான சுற்றுவட்டத்திலிருந்து பொத்துவில் வீதி வழியே ஏறக்குறைய 100 மீற்றர் சென்று, பழைய பஸ்நிலைய வீதிக்கு வலப்பக்கம் திரும்பி மேலும் ஏறக்குறைய 75 மீற்றர் செல்ல விற்பனைக்குரிய ஆதனம் மொணராகலை, பொத்துவில் வீதி (சந்தைக்கு உட்பிரவேசிக்கும் வீதி) வரிமதிப்பு இல. 30/37 ஐக் கொண்டு வீதியை நோக்கி அதன் வலப்பக்கத்தில் அமைந்துள்ளது.

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ், மேற்குறிப்பிடப்பட்ட ஆதனங் களை முறையே 2018, மே 11 ஆந் திகதி மு.ப.11.00 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2018.03.29 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் அதே திகதிய "த ஐலண்ட்", "திவயின" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றிபெற்ற கொள்வன வாளர் ஏல விற்பனை முடிவில் பின்வரும் தொகைகளை ஏலதாரருக்கு காசாக செலுத்த வேண்டும் :-

1. கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
2. உள்ளூர் அதிகாரசபை கட்டணங்கள் 1% மற்றும் அதே போன்று பெ.சே.வ. கட்டணங்கள் ;
3. ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2.5% (இரண்டரை வீதம்) ;
4. மொத்த விளம்பரச் செலவுக் கட்டணங்கள்;
5. விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தும் கட்டணம்;
6. எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 1,500 மற்றும் விற்பனையில் உறப்பட்ட வேறேதேனும் கட்டணங்கள்.

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்கு செலுத்த வேண்டும் சொல்லப்பட்ட தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10%ஐத் தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங்களையும் "கொழும்பு 3, காலி வீதி, இல. 450, தலைமை அலுவலகம், பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. முகாமையாளர் அறவீடுகள்" அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 011- 4667130.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
உத்தரவுபெற்ற ஏலதாரர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல வீதி,
மாவில்மடை,
கண்டி.

தொலைபேசி /தொலைநகல் இல.: 081- 2210595.
செல்லிட தொலைபேசி இல. 071- 475574, 071-4962449.

4-796

---

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்*

கடன் தொடர்பு இல.74123195

அம்பன்பொல தெத்தாவ, அநுராதபுரம் வீதியில் அமைந்த திருவாளர்கள் மக்மா பா(f)ம்ஸ் (பிறைவேட் லிமிட்டட் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2018.03.02ஆம் திகதிய 2061 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2018.02.21 ஆந் திகதிய "தினமின", "தினகரன்", "டெய்லி நியூஸ்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல.24, டொறிங்டன் வீதி, கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் சொக்மன் அன்ட் சமரவிக்ரம ஏல நிறுவனத்தின் ஏலதாரர் 2018.06.21ஆந் திகதி மு.ப.11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம்,வன்னி ஹத்பற்று ஹதலிஸ்பஹ கிழக்கு கோரளையில் கல்கமுவ பிரதேச சபை எல்லைகளுள் அஹட்டுவெவ பிரதேச செயலாளர் பிரிவில் ஈரியாவ, 129 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் ஈரியாவையில் அமைந்ததும் உத்தரவுபெற்ற நிலஅளவையார் பீ.ஜீ. பந்துதிலக்க தயாரித்த 2011,ஓகத்து 15 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 18678/ 2011 இல் துண்டு 01 என விபரித்த கனேயாய என அழைக்கப்படும் பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : ஆர். எம். முதியான்சே உரிமைகோரும் காணியும் ; கிழக்கு:கிராம சபை பாதையும் ; தெற்கு : அதரகல்ல டாங்கும் ; மேற்கு: உல்பத்தே எல்லை உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பி. ஜி. பந்துதிலக்க தயாரித்த வரைபட இல. 4850/99 இல் துண்டு இல. 1 உம் எல்லைகளாகக் கொண்டு ஐந்து ஏக்கர் (5ஏ.0றூ. 0பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இது நிக்கவெரட்டிய காணிப் பதிவகத்தில் J 01/ 244இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட அட்டவணை ஒழுங்காக உள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

திரு. டபிள்யூ. எம். ஆர். வீரசிங்ஹ,
முகாமையாளர்.

இலங்கை வங்கி
கல்கமுவ.

4-798